பக்கங்கள் 12

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 189

சனிக்கிழமை 03 ஜூன் 2023

வைகாசி 20 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

வனவளத் திணைக்களத்திடமிருந்து

# 29,000 ஏக். நிலப்பரப்பை விடுவிப்பதற்கு இணக்கம்

முல்லைத்தீவு, ஜூன் 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் கட்டுப் பாட்டிலுள்ள, பொதுமக்கள் தற்போது பயன்படுத்தும் 29 ஆயி ரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு வனவளத் திணைக்களம் இணங் கியுள்ளது. மீள் வர்த்தமானி உருவாக்கத்துக்கான வரைபடம் நேற்று முன்தினம் தயாரிக்கப்பட்டுள்ளது.

»11

## வாள்வெட்டுடன் தொடர்பு; மூவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். நகரில் உள்ள கடையொன்றில், அண்மை யில் இரவுவேளை இடம்பெற்ற வாள்

»10

கஜேந்திரகுமார் மீதான தாக்குதல்

## முறைப்பாடு வழங்கப்பட்டதும் துரிதகதியில் நடவடிக்கைகள்

ம.உ.ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு விடுக்கப்பட்ட

»11

# சிறுவர் வன்கொடுமை யாழில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்தில் சிறுவர் வன்கொ டுமை அதிகரித்து வருவதுடன், இது எதிர்காலத்தையும் பாதிக்கக் கூடிய பிரச்சினையாகவே மாறியுள்ளது - என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரி வித்தார்.

'சிறுவர் வன்கொடுமையைத் தடுத் தல்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி சங்கா னையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 4 மாதங்களுக்கு மேலாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அபிவிருத்தி சார் நட

»11

மருதங்கேணியில் நேற்று

# கஜேந்திரகுமார் எம்.பிக்கு துப்பாக்கிமுனை மிரட்டல்!

ஹெல்மெட்டாலும் தாக்குதல்
புலனாய்வுப்பிரிவினரே சூத்திரதாரிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நேற்றுப் பகல் மருதங்கேணி யில் வைத்துத் தாக்கப்பட்டார். அவரை தலைக்கவசத்தால் தாக்கிய புல னாய்வாளர் தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளார்.

»11



## இந்தியாவில் ரயில் விபத்து 70க்கு மேற்பட்டோர் சாவு!

சென்னை, ஜூன் 3

கொல்கத்தாவில் இருந்து சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த கோரமண்டல் விரைவு ரயில் ஒடிசா மாநிலத்தின் பாலாசூர் மாவட்டம் அருகே நேற்று இரவு சரக்கு ரயிலுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 70க்கும் மேற்பட் டோர் உயிரிழந்தனர் என்று நேற்று இரவு

»11

## யாழ்ப்பாண விமான நிலையத்தின் ஓடுபாதை விரைவில் விஸ்தரிப்பு!

அமைச்சர் நிமால் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுதளத்தை விஸ்தரிப்பதற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து கடன்வசதி எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் கடன்வசதி கிடைக்கப்பெற்ற தும் விரைவில் விமான நிலையத்தின் விஸ்தரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள், கற்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விரிவு:- பக் - 02 இல்

## சிப்பாய் மீது தாக்குதல்; பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 3

விடுமுறையில் தனது வீடு செல்வதற்காக யாழ்ப் பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் பேருந் துக்காகக் காத்திருந்த சிப்பாய் மீது, கண்ணா டிப்போத்தலால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ மருத் துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள் ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலி ஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

(அ-ம-20)

## ஹெரோய்னுடன் யுவதி கைதானார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

20 மில்லிகிராம் உயிர்கொல்லிப் போதைப்பொரு ளான ஹெரோய்னுடன் 21 வயதுடைய

»11

நயினை நாகபூஷணி திருவிழா

# கடற்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற படகுகளுக்கு சான்றிதழ் அவசியம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாவுக்காக கடற் போக்குவரத்தின் ஈடுபடும் பட குகள் தரச்சான்றிதழ்களை கட் டாயம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாவுக்காக முன் னேற்பாட்டுக் கலந்துரையா டல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில், நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு யாழ்ப் பாணம் மாவட்டச்

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விமான நிலையத்தின் ஓடுபாதை விரைவில் விஸ்தரிப்பு

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 3**

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுதளத்தை விஸ்தரிப்பதற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து கடன்வசதி எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் கடன்வசதி கிடைக்கப்பெற்றதும் விரைவில் விமான நிலையத்தின் விஸ்தரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு தற்போது வாரமொன்றில் 4 நாள்கள் விமான சேவைகள் இடம்பெறுகின்றன. அதனை ஏழு நாள்களாக அதிகரிப்பது தொடர்பில் இந்தியத் தூதுவருடன் கலந்துரையாடி வருகின்றோம்.

யாழ்ப்பாண விமான நிலையத்தின் ஓடுபாதையில் 75 ஆசனங்களைக் கொண்ட விமானங்களே தற்போது தரையிறங்க முடிகிறது. அந்தவகையில் ஓடுதளத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான கடன் வசதியை இந்தியாவிடமிருந்து எதிர்பார்த்துள்ளோம்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையிலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையிலும் பலாலி, யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ச-இ)

## பருப்பு, சீனி, வெங்காயம் சதொச விலை குறைப்பு!

கொழும்பு, ஜூன் 3

6 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என லங்கா சதொச தெரிவித்துள்ளது.

அதன்படி சீனி, சிவப்புப் பருப்பு, பெரிய வெங்காயம், கடலை, வெள்ளைச்சீனி, வெள்ளை நாட்டரிசி ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோகிராம் கோதுமை மா 15 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 210 ரூபாவுக்கும், ஒரு கிலோ பெரிய வெங்காயம் 14 ரூபாவால் குறைக்கப்பட்டு 115 ரூபாவுக்கும் ஒருகிலோ சிவப்புப் பருப்பு 11 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 314 ரூபாவாகவும் வெள்ளைச் சீனி ஒரு கிலோ 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 229 ரூபாவுக்கும் கடலை 5 ரூபாவால் விலை குறைக்கப்பட்டு 545 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன் ஒரு கிலோகிராம் வெள்ளை நாட்டரிசியின் விலை 4 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என சதொச தெரிவித்துள்ளது. (ச-இ)

## மக்களுக்கு வரிக்கோப்பு; வரி அறவீட்டுக்கு அல்ல!

### நிதி இராஜாங்க அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 3

2023 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்துக் குடிமக்களுக்கும் வரிக்கோப்பு திறக்கப்படவுள்ளது. 01.01.2024 ஆம் ஆண்டு முதல் இந்த வரிக்கோப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனூடாக அவர்களிடமிருந்து வரி அறவிடப்படும் என்ற அர்த்தமில்லை.

- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய விளக்கமளித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

18 வயதுக்கு மேற்பட்ட அனைத்துக் குடிமக்களுக்கும் வரிக்கோப்புத் திறக்கப்படும் என்று 2023 வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அரசாங்கம் அவர்களிடமிருந்து வரிப்பணத்தை வசூலிக்கப்போகிறது என்று அர்த்தமில்லை.

அரச வருமானத்துக்கு சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவரவே இந்தப் பதிவு. இந்த வரிக்கோப்பிலுள்ள தகவலுக்கமைய அரசாங்கத்தால் எதிர்கால நலன்புரிக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும் - என்றார். (ச-இ)

## 18 வயது சகோதரியைக் கழுத்தறுத்து கொலை செய்த 25 வயது இளைஞன்!

### காதல் விவகாரத்தால் நிகழ்ந்த விபரீதம்

கொழும்பு, ஜூன் 3

தங்கையின் காதல் விவகாரத்தை அறிந்து ஆத்திரமுற்ற அண்ணன், அவரைக் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்துள்ளார். இந்தக் கொடூரச் சம்பவம் கம்பஹா மாவட்டம், பியகமவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பியகமவைச் சேர்ந்த 18 வயது உயர்தர வகுப்பு மாணவி, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார். இந்த விடயம் சில நாள்களுக்கு முன்னர் மாணவியின் வீட்டாருக்குத் தெரியவந்துள்ளது. இதையடுத்து ஆத்திரமுற்ற மாணவியின் மூத்த சகோதரன், தங்கையுடன் கடந்த 31 ஆம் திகதி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு அவரை அடித்துத் துன்புறுத்தியுள்ளார்.

மாணவி இந்தச் சித்திரவதையைத் தனது காதலனுக்குத் தொலைபேசியூடாகத் தெரியப்படுத்தியுள்ளார். கோபமடைந்த காதலன், மூத்த சகோதரனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தங்கள் காதலுக்கு எதிர்ப்புக் காட்ட வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை மதுபோதையில் வீட்டுக்கு வந்த மூத்த சகோதரன், காதலுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்குமாறு சகோதரியை வற்புறுத்தியுள்ளார். அதற்கு அவர் உடன்படாத நிலையில், கத்தியால் அவரின் கழுத்தை அறுத்து வெறியாட்டம் புரிந்துள்ளார்.

குருதி வெள்ளத்தில் கிடந்த 18 வயது மாணவியை, அவரின் குடும்பத்தினர் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 25 வயதுடைய மூத்த சகோதரனையும், காதலனான 23 வயதுடைய இளைஞரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஓ-22)

### பொசனை முன்னிட்டு

## நீண்டகால சிறையிருந்த கைதிகளுக்கு விடுதலை

கொழும்பு, ஜூன் 3

பொசன் தினத்தை முன்னிட்டு நீண்டகால சிறைத் தண்டனையை அனுபவித்த கைதிகள் சிலருக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இந்த மன்னிப்பு வழங்கப்படவுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய அபராதம் உட்பட 40 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு நாளையுடன் 20 வருட சிறைத்தண்டனையை அனுபவித்த கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது. (ச-இ)

# மதக்குரோதங்களை வளர்க்காது சமய விழுமியத்தை மதிப்போம்

## சர்வமதத் தலைவர்கள் வேண்டுகோள்

வவுனியா, ஜூன் 3

மத நல்லிணக்கத்துக்கு எமது நாட்டில் முன்னெப்போதும் இல்லாதவாறு பெரும் சவால்கள் ஏற்பட்டுள்ளன. இந்தவேளையில் மதக் குரோதங்களை அரசியல் வியாபாரப் பொருளாக்கி அரசியல் லாபமீட்டுவதை அரசியல்வாதிகள் தவிர்க்கவேண்டும் என சர்வமதத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

தேசிய சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை வவுனியாவிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற சர்வமதத் தலைவர்களின் ஊடக சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை பி. ஜெபரட்ணம்,

மற்ற மதங்களை மதிக்காத - அன்பு செய்யாத - ஏற்றுக்கொள்ளாத தன்மை எமது நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. அதனால் பல்வேறு இடங்களில் பல்வேறு பிரிவினைகள் மதங்களிடையே ஏற்படுகின்றன. நாம் எங்கள் மதத்தைப் போன்று ஏனைய மதங்களையும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் மக்களிடையே வேற்றுமைகளை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் திணிக்கப்படுகின்றன. ஓர் இனம் வாழும் இடத்தில் அந்த இனத்துக்குத் தேவையில்லாத அந்த இனத்துக்கு ஒவ்வாத மற்றோர் இனத்துக்குத் தேவையான ஒரு விடயத்தைச் செய்கின்றபோது மக்களுக்கிடையில் பிரிவினை ஏற்படக் காரணமாகிவிடுகின்றது.

இந்த மதக்குரோதங்களை அரசியல் வியாபாரப் பொருளாக்கி அதன் மூலம் அரசியல் இலாபம் தேடுவது மிகப்பெரிய கவலை தரும் விடயம்.

எனவே கலாசார சமய விழுமியங்களை மதித்துச் செயற்படுகின்ற போது இவ்வாறான பிரிவினைகள் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியும் - என்றார்.

இந்த ஊடகசந்திப்பில் பௌத்த, கிறிஸ்தவ, சைவ, இஸ்லாமிய மத குருமார்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டச் செயலர் வழங்கிய

# ஆவணத்துக்கு அமைவாக சந்தேகநபர்கள் கைது

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

**யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவிலும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஆவணம் யாழ். மாவட்டச் செயலரால் ஒப்படைக்கப்பட்டது. அதற்கு அமைவாக சில குற்றவாளிகளைக் கைது செய்துள்ளோம் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழுக்கூட்டம் கடந்த புதன்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், ஒவ்வொரு பிரதேசசெயலர்களாலும் தமது பிரதேசசெயலர் பிரிவில் நடைபெறும் சமூக விரோதச் செயல்கள் அடையாளம் காணப்பட்டு அவை எந்தப் பிரதேசத்தில் நடைபெறுகின்றன? யார் அவற்றுடன் தொடர்புடையவர்கள்? என்பனவும் கண்டறியப்பட்டு அது தொடர்பான ஆவணம் தயாரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரதேச செயலர்களாலும் தயாரிக்கப்பட்ட ஆவணம் தொகுக்கப்பட்டு யாழ். மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரனால், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

'மாவட்டச் செயலர் கையளித்த ஆவணத்துக்கு அமைவாக அதில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள சந்தேகநபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையோரை கைது செய்வதற்கான விசாரணைகளை சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் முன்னெடுத்து வருகின்றனர்' என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (ஒ-5,26)




சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி மற்றும் பொதுக்கூட்டம் வேள்ட் விசன் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் சங்கானையில் நேற்று இடம்பெற்றது.

நடைபவனியானது சங்கானை பிரதேசகலாசார மண்டபத்தில் ஆரம்பமாகி வலிகாமம் மேற்கு பிரதேசசெயலகத்தில் நிறைவுற்று பிரதேசசெயலகம் முன்பாகப் பொதுக்கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வலிகாமம் மேற்கு பிரதேசசெயலர், தொண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-20)



## சீமெந்து விலை குறையும்!

கொழும்பு, ஜூன் 3

எதிர்வரும் இரண்டு நாள்களில் சீமெந்து மூடையின் விலை 300 முதல் 500 ரூபா வரை குறைவடையும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். சீமெந்து உற்பத்தியாளர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடியதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-இ)

அரச காணிகளில் அமைக்கப்பட்ட வீடுகள்

# வசிக்காதவர்களிடமிருந்து மீளப்பெற ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் அரச காணிகள் வழங்கப்பட்டு அதில் வீடமைப்புத் திட்டங்களில் வீடுகளைப் பெற்ற பலர் அதில் வசிக்காமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறானவர்களிடமிருந்து வீடுகளை மீளப்பெறுவதற்கான நடவடிக்கையை எடுப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. தேசிய வீடமைப்பு அதிகாரசபை தொடர்பான விடயம் ஆராயப்பட்டபோதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சங்கானை, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் மக்கள் வசிக்காமல் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டினார். அவர்கள் அந்த வீடுகளைப் பயன்படுத்தாமல் இருக்கின்றனர். ஆனால், மாவட்டத்தில் வீடுகள் தேவையானவர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. வீடுகளைப் பெற்றும் பயன்படுத்தாதவர்களிடமிருந்து மீளப்பெற்று இல்லாதவர்களுக்கு வழங்கவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், காணியில்லை என்றுதான் அவர்களுக்கு காணி வழங்கி வீடுகள் வழங்கியுள்ளீர்கள். அந்த வீடுகளை அவர்கள் பெற்றிருந்தாலும் தொழில் அல்லது கல்வித் தேவைக்காக தற்காலிகமாக அங்கிருந்து வெளியேறியிருக்கலாம். அவ்வாறான நிலைமையில் வீடுகளை மீளப்பெறுவது பொருத்தமற்ற நடவடிக்கை என்று குறிப்பிட்டார்.

'ஆள்கள் இல்லாத இத்தகைய வீடுகளால் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன. அவற்றில் மக்களைக் குடியமர்த்த வேண்டும்' என்று மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் எதிர்ப்பு வெளியிட்டனர்.

"ஆள்கள் இல்லாத ஒவ்வொரு வீடுகள் தொடர்பிலும் தனித்தனியாக நடவடிக்கை எடுக்கப்படும். வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு வேறு எங்காவது வீடுகள் உள்ளனவா? தற்காலிகமாக அங்கு வசிக்காமல் உள்ளனரா? என்ற விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ஒ-5)




செத்தவீடெண்டால் 'பொடி' இல்லாட்டியும் கூட வெடி கட்டாயம் இருக்க வேணுமெண்டது எங்கட ஆக்களிட்ட ஒரு கலாசாரமாவே மாறிட்டுது. கிட்டடியில ஒரு செத்தவீட்டில கண்ட உந்த வெடிப்புராணத்தை கொஞ்சம் சொன்னாத்தான் பட்சிக்கு மனம் ஆறும். இதுதான் அந்த 'வெடிப்புராணம்'.

'டங்கமாரி ஊதாரியை' ஊதியபடி 'பாண்ட் குரூப்' வெளிக்கிட, பின்னுக்கு நல்லாச்சோடிச்ச பாடையில 'பொடி'. இப்ப 'பாண்ட்' சவுண்டை கேக்க விடாதபடி எங்கட பெடியளுக்கு வித்தையைக் காட்ட வேணும். அந்தப் பெரிய சத்தத்தை வெல்லுற அளவுக்கு ஏதும் திட்டமிருக்கா? இருக்கே. ஓட்டோ நிறையப் பெட்டி பெட்டியா சீனவெடி இருக்கே. பிறகென்ன எல்லாம் வெடிமயம் தான்.

'சர் எண்டு திரியில மூண்ட நெருப்பு உள்ளுக்க இறங்கின செக்கன்ல வெடிச்சு, கந்தகத்தோட கடுதாசியும் வெடிச்சு... சுத்தி நிக்கிறவையின்ர காதெல்லாம் அடைச்சு... அப்பப்பா, பாக்க குடுத்து வைக்கவேணும் அந்தக் கண்றாவிக் காட்சியைக் காண. எங்கையும் வெடி, எதிலையும்வெடிதான்.

புதிசா கட்டினதே எண்டு றோட்டு மதகுகளிலையோ, கட்டடங்களிலையோ ஒரு பரிதாபம் கூட காட்டேலை. மதகுக்க றோலோட வைச்சு கொளுத்தினா ஊரே அதிருமெல்லோ. அந்தச் சத்தத்துக்கு ஈடு இணையிருக்கோ? எல்லா மதகும் அதிர, அதுவும் பத்தாதெண்டு மதிலுகளுக்கு மேலால பிண ஊர்வலம் போற பாதையில இருக்கிற வீடுகளுக்கையும் வெடியை எறிஞ்சு விளையாடுறதில எங்கட பெடியளுக்கு தனிச்சுகம்.

சின்னப்பிள்ளையள் நிக்கிற இடங்கள்.....

றோட்டில போற வாற வாகனங்கள்...

வருத்தக்காரர் இருக்கிற வீடுகள்...

பள்ளிக்கூட வாசல்....

இப்பிடியான இடங்களில வழமையை விடவும் கும்பலாக வெடியைப் போட்டு 'வெடிச் சமா' நடக்கும். ஒருத்தரும் 'கேமைக்' கேக்க முடியாது. கேட்டால் 'முந்திச் சண்டை நடக்கேக்க ஆமிக்காரன் கண்டபாட்டுக்கு வெடிவைக்கேக்க ஆரும் திருப்பிக் கேட்டனியளோ?' எண்டமாதிரி வசனங்கள் பதிலுக்கு வரும். அப்பிடியும் ஆரும் நியாயம் கேட்டால், இருக்கவே இருக்கு, வெடியைவிட பயங்கரமான 'உள்ளநாட்டுத் தூசணங்கள்'. வெடிக்கு காதைப் பொத்தாதவையும் இதுக்கு காதைப் பொத்திக் கொண்டு போடுவினம். பெட்டையள் தெரியிற இடங்களைக் கண்டவுடன எங்கட பெடியளுக்குத் தனிக்குஷி. கையிலேயே கொளுத்தி வெடிக்க வைப்பினம்.

காசு இப்பிடித்தான் கரியாகிறதெண்டதை கண்ணுக்கு முன்னால பாப்பம். ஓட்டோவில வெடி சப்ளை வஞ்சகமில்லாமல் வந்து கொண்டே இருக்க எங்கட வெடியாட்டம் உச்சத்துக்கு போக, எல்லாரும் வெடி கொளுத்துற மாதிரி 'செல்.'.பியும்' எடுக்கிறாங்கள்.

இதைவிடவும் கலக்கான, காது வெடிக்கிறமாதிரியான வெடிச் சேட்டையளை நீங்களும் பார்த்திருப்பியள். மேல சொன்னது 'ஒரு பெட்டி வெடிக்கு ஒரு வெடி' பதம்தான். முந்தி செத்தவீட்டு ஊர்வலம் கண்ணில பட்டாலே துடக்கு எண்டிருந்த காலத்தில, எல்லாருக்கும் பிணம் சுடலைக்கு போறதை அறிவிக்க சந்தியளில இப்பிடி வெடி கொளுத்தினவை. இப்ப என்னெண்டால், சவப்பெட்டிக்க கூட வெடியைக் கொளுத்தி அதை ஒரு பம்பலாவும் மாத்தி, தங்கட காசுப் பவரையும் காட்டுறம். நாடு கிடக்கிற கிடையில இந்த வெடிச்சேட்டையள் தேவையோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படங்கள் - ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், நல்லூர் சிவன் அம்மன் கோவில் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ஒ)

## நீச்சலில் தங்கம் வென்ற புற்றுநோயுற்ற மூதாட்டி!



ஒட்டாவா, ஜூன் 3

கனடாவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 72 வயதான மூதாட்டி ஒருவர் நீச்சல் போட்டித் தொடரில் தங்கப் பதக்கங்களை வென்று அசத்தியுள்ளார்.

கியூபெக்கைச் சேர்ந்த லினா கோர்டோயிஸ் என்ற மூதாட்டியே நீச்சல் போட்டித் தொடரில் சாதனை படைத்துள்ளார்.

ஒருபுறம் புற்றுநோய்க்கான சிகிச்சை மறுபுறம் நீச்சல் பயிற்சி என அதிக மனவலிமையுடன் போட்டியில் பங்கேற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

100 மீற்றர் மற்றும் 400 மீற்றர் ஆகிய இரண்டு போட்டிகளிலும் அபார திறமைகளை வெளிப்படுத்தி தங்கப் பதக்கங்களை லினா வென்றெடுத்துள்ளார். (ச-இ)

## முழுமதி அறிவியல் அரங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஓய்வுபெற்ற ஆசிரியர் அமரர் வே.க. பாலசிங்கம் ஞாபகார்த்த முழுமதி அறிவியல் அரங்கம் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு முத்தமிழ் கலை அரங்க நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இரா.மதிகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக வேந்தர் சுப்ரமணியம் மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். ஆசியுரையை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, நினைவுப் பேருரையை திருமதி நாகலிங்கம் புஸ்பமணி ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச)

# சடலத்துடன் கலவி குற்றமல்ல

## கர்நாடக நீதிமன்றத் தீர்ப்பால் பரபரப்பு

சென்னை, ஜூன் 3

உயிரற்ற ஒன்றை துஷ்பிரயோகத்துக் குட்படுத்துவது பலாத்காரம் என சொல்லமுடியாது. அந்தவகையில் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் அது குற்றமல்ல என்று கர்நாடகா உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் துமகுரு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் 2015ஆம் ஆண்டு மதுபோதையில் 21 வயது இளம்பெண்ணிடம் தவறாக நடக்க முயற்சித்து அவரைக் கொலை செய்துள்ளார். பின்னர் உயிரற்ற பெண்ணின் சடலத்தை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியிருந்தார்.

இந்தக் கொடூர சம்பவம் தொடர்பில் குற்றவாளிக்கு கர்நாடக நீதிமன்று, பெண்ணைக் கொலை செய்ததற்கு ஆயுள் தண்டனையும், சடலத்தை துஷ்பிரயோகம் செய்தமைக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

அதனை எதிர்த்து குற்றவாளி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்போது, இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிமன்று, குற்றவாளியின் கொலைக் குற்றத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனை ஏற்புடையது.

ஆயினும் அந்தப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு வெறும் உயிரற்ற சடலத்தை துஷ்பிரயோ கத்துக் குட்படுத்தியமை இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படாது.

அதற்கமைய அந்தக் குற்றத் துக்கு விதிக்கப்பட்ட 10 ஆண்டு சிறைத் தண்டனை ரத்துச் செய்யப்படுகிறது என்று நீதி மன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)



கொழும்புத்துறை இலைந்தைக்குளம் வதரிபீட விநாயகர் ஆலய இரதோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை அடியவர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ச-17)

## பரிசளிப்பு விழா

இணுவில், ஜூன் 3

இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் திருப்புகழ் திலகம் தியாகராஜா சுவாமிகள் ஞாபகார்த்த திருப்புகழ்ப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மேல்மாடி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வானது இந்துதுர்மாசிரியர் இ.கிருஷ்ணராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோயில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாவில் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8.30மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஒ-ரி)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும் . கவனமாக இருக்கவும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**மிதுனம்** : அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரி யம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவும் பொருள்சேர்க்கை உண்டு.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபட உகந்த நாள். செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** எந்தமுடிவையும்ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் உதவிகரமாக இருப்பார்கள். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளுக்கு மிகவும் அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வர். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். . சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருக்கும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** மனதில் அவ்வப்போது இனம் தெரியாத சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். செலவுகளை ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மதச்சார்பின்மையும் மத நிந்தனைகளும்

இலங்கையின் அரசமைப்பு பௌத்தத்துக்கே முதலிடம் வழங்கியிருக்கின்றது. இந்த நாட்டில் நீண்டகாலம் புரையோடிப்போயுள்ள இன்றுவரையில் தீராத தலைவலியாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கு பௌத்தத்துக்கு முதலிடம் வழங்கியமையும் மூலகாரணம். அரசமைப்பில் எத்தனையோ விடயங்கள் குறிப்பிடப்பட்டு அவை இன்று வரையில் நடைமுறைப்படுத்தாமலும் இருக்கின்றன. உதாரணத்துக்கு 13 ஆம் திருத்தத்தின் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கூறலாம். ஆனால், ஆட்சியாளர்கள் தமது தலையை அடமானம் வைத்தாவது 'பௌத்தத்துக்கு முதலிடம்' என்ற நிலையைத் தக்கவைப்பதில் தவறுவதில்லை. நாட்டின் ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பது முதல் ஆட்சியாளர்கள் என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம், பௌத்தத்துக்கு முதலிடம் என்ற அந்தஸ்தை தக்கவைத்துக் கொண்டுள்ள பௌத்த பீடங்கள்தான் தீர்மானிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு – கிழக்கில் மேற்கொள்ளப்படும் தொல்பொருள் ஆய்வுகளுக்கு பிக்குகளிடமோ ஏனைய தனியாரிடமோ பணம் வாங்கக் கூடாது என்று தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருக்கு பணித்திருந்தார். பிக்குகளிடம் பணம் வாங்கி அவர்களுக்குச் சார்பாக தொல்பொருள் பணிகள் வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டின் பின்னணியில் அவர் இத்தகைய பணிப்பை விடுத்திருந்தார். இதற்குப் பதிலடிகொடுக்கும் வகையில் அஸ்கிரிய பீடத்தால், தனியாரிடம் பணம் வாங்கி தொல்பொருள்பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும், வடக்கு – கிழக்கில் விகாரைகள் மற்றும் தொல்பொருள் தலங்களின் புனரமைப்பை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதியிடம் கோரப்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதியும் பின்வாங்கி விட்டார். இவ்வாறு ஆட்சியாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும்கூட பௌத்த பீடங்கள் தீர்மானிக்கும் இந்த நாட்டில் பௌத்தத்துக்கு எதிரான நிந்தனைகளின்போது மாத்திரமே ஆட்சியாளர்கள் கண்ணுக்குத் தெரிகின்றனர்.

முன்னாள் ஆட்சியாளர் சந்திரிகா குமாரதுங்க சில தினங்களுக்கு முன்னர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். 'நகைச்சுவைக் கலைஞர் நடாஷாவை பௌத்தத்தை உள்நோக்கத்துடன் அவமதித்தமைக்காக கைது செய்ய முடியும் என்றால் இஸ்லாமிய மதத்தை அவமதித்த, தேவாலயங்களையும், மசூதிகளையும் எரியூட்டிய ஞானசாரர் உட்பட ஏனைய பலரை ஏன் கைது செய்யமுடியாது?' என்பதே சந்திரிகாவின் கேள்வி. இந்த நாட்டில் மத நிந்தனை என்பது இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாகவே தொடர்கின்றது. சிறுபான்மை மதங்களுக்கு எதிரான மதநிந்தனை என்பது பௌத்தர்களால் பின்பற்றப்பட்டுவரும் ஒன்றாகவே இருந்து வருகின்றது. அவ்வாறானவர்களை கைது செய்யாமை தொடர்பிலேயே சந்திரிகா கேள்வி எழுப்பியிருந்தார். அவரது கேள்வி நியாயமாக இருந்தாலும், சந்திரிகா கூட தனது ஆட்சிக் காலத்தில் பௌத்த பீடங்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களின் சொல்லைத் தட்டாதவராகவே செயற்பட்டிருந்தார்.

பல மதங்களைப் பின்பற்றும் பல்லின மக்கள் வாழும் நாட்டில் ஒரு மதத்துக்கு மட்டுமே முன்னுரிமை வழங்குவதன் காரணமாகவே இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுகின்றது. முன்னுரிமையளிக்கப்படும் மதத்தவர்கள் ஏனைய மதங்களை அரவணைப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் தாழ்த்துகின்றனர். ஆட்சியாளர்களும் அது தொடர்பில் அக்கறை காட்டுவதில்லை. பதிலாக முன்னுரிமையளிக்கப்படும் மதத்தை யாராவது நிந்தித்தால் மாத்திரமே அவர்களின் கவனம் குவிகின்றது. இந்தப் பாரபட்சமே நாட்டில் குருதி ஆறு பெருக்கெடுத்து ஓடுவதற்குக் காரணமாகவும் இருந்தது. இலங்கை உளப்பூர்வமான, உண்மையான, மதச்சார்பின்மை நாடாக மாறும்போதே மதநிந்தனைகளும், பாரபட்சங்களும் ஒழிக்கப்படும். நாடும் சுபீட்சம் பெறும்.

### நாளொரு நல்வார்த்தை

"நம்பிக்கை என்பது ஒருநாளில் உதிர்ந்துவிடும் பூவாக இருந்து விடக்கூடாது மேலும் மேலும் மலரை உருவாக்கும் செடியாக இருக்க வேண்டும்" — அரிஸ்ரோட்டில்




# 56 தொன் கடலட்டை யாழிலிருந்து ஏற்றுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 3

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 619 ஏக்கரில் கடலட்டைப் பண்ணை முன்னெடுக்கப்படுவதாகவும் அதன் ஊடாக கடந்த ஆண்டு மாத்திரம் 56 தொன் கடலட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன எனவும் நாரா நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடலட்டைப் பண்ணை தொடர்பில் ஆராயப்பட்டபோதே மேற்கண்டவாறு கூறப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கடலட்டைப் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் 95 சதவீதமானவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள்தான். கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படும்போது அந்தப் பகுதி கடற்றொழில் சங்கங்களின் அனுமதியின்றி அதைச் செய்ய முடியாது. 4 திணைக்களங்களின் மேற்பார்வையிலேயே கடலட்டைப் பண்ணைக்கான அனுமதி வழங்கப்படுகின்றது. 619 ஏக்கரில் முன்னெடுக்கப்படும் கடலட்டைப் பண்ணை ஊடாக 56 தொன் கடலட்டை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு கடலட்டைகளை ஏற்றுமதி செய்யும் பிரதான ஏற்றுமதியாளரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்தான் - என்று நாரா நிறுவனப் பிரதிநிதி கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். (ஒ-5)

# மாணவர்கள் கடத்தலென வதந்தி பரப்பினால் கைது!

*பொலிஸார் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூன் 3

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கடத்தல்கள் இடம்பெறுகின்றன என சமூக ஊடகங்களில் போலியான தகவல்களைப் பரப்புவோர் தொடர்பில் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ இதுகுறித்துக் கூறுகையில்,

சிறுவர்கள் கடத்தப்படுவதாக போலியான தகவல்கள் சமூக ஊடகங்களில் வெளியாகின்றன.

இவ்வாறான போலிச் செய்திகளுக்கு எவரும் பலியாகக்கூடாது.

சிறுவர்களைக் கடத்தும் குழுதொடர்பிலும் இதுவரை பொலிஸார் எந்தத் தகவல்களையோ ஒளிப்படங்களையோ வெளியிடவில்லை.

சில தனிநபர்கள் இவ்வாறான போலியான தகவல்களை வெளியிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். இது குறித்த விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறுவர்கள் கடத்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரித்தபோது அநேகமானவை பொய்யென்பது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு போலியான தகவல்களைப் பரப்புவோர் கண்டறியப்பட்டால் உடன் கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்படுவர்- என்றார். (ச-இ)

### நாளை

04.06.2023
ஞாயிற்றுக்கிழமை
வைகாசி 21

சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல்

## மாநகரசபைக்கு சொந்தமான கடைகளை குத்தகை உரிமை மாற்றம் செய்தல்.

யாழ்.மாநகர சபையினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் மாநகரசபையின் அங்கீகாரமின்றி பல்வேறு நபர்களுக்கு கைமாற்றப்பட்டுள்ளன. இதனால் வாடகை அறவிடுதல், குத்தகை உடன்படிக்கை புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை மாநகரசபை எதிர்நோக்குகின்றது. எனவே வடக்கு மாகாண முதலமைச்சரின் NP/05/01/JMC/34 ம் இலக்க 2017.12.04 ஆம் திகதிய அனுமதியின் பிரகாரம் தற்போது குறித்த கடைகளை நடாத்திக்கொண்டிருப்பவர்களின் பெயரிற்கு குத்தகை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இன்றிலிருந்து இரு வாரங்களுக்குப் பின்னர் கீழ்க்குறிப்பிட்டடுள்ள கடைகளை தற்போது நடாத்திக் கொண்டிருப்பவருக்கு குத்தகை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடைகளின் தற்போதைய குத்தகை உரிமையாளர்களின் குத்தகை உரிமம் இரத்துச் செய்யப்படுகின்றது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**நவீன சந்தை உட்புறம்**

| தொ.இல | கடை இல | குத்தகையாளர் முழுப்பெயர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி | உரிமை மாற்றத்திற்கு விண்ணப்பித்தோர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | தைபூர் மொகமட் இப்திகார் | 613250905V | 26/2 P.T de மாவத்தை, தெஹிவளை | திரு.சிவராசா பிரசன்னா | 773153698V | வளாக வீதி திருநெல் வேலி யாழ்ப்பாணம் |
| 2 | 4 | திரு. நாகலிங்கம் கோபாலசிங்கம் | 392531980V | இல:11, சங்கிலியன் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம் | திரு.தம்பிராசா குணசிங்கம் | 470610026V | 40/6 றெயில்வே கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம் |
| 3 | 11 | மீரான் கண்டு முகமது கரீம் | 371310797V | 33/1 , சென்.லப்பறாக்ஸ் றோட், நீர்கொழும்பு | திரு முத்துச்சாமி ஜெகதீசன் | 560441649V | 114 ஏ வி றோட் அரியாலை யாழ்ப்பாணம் |
| 4 | 12 | மீரான் கண்டு முகமது கரீம் | 371310797V | 33/1 , சென்.லப்பறாக்ஸ் றோட், நீர்கொழும்பு | திரு முத்துச்சாமி ஜெகதீசன் | 560441649V | 114 ஏ வி றோட் அரியாலை யாழ்ப்பாணம் |
| 5 | 13 | திரு சோமசேகரம்பிள்ளை மன்மதராசன் | 553401720V | 175/10 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் | திரு சிவசுப்ரமணியம் சுதாகர் | 840160220V | 537 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| 6 | 14 | திரு சோமசேகரம்பிள்ளை மன்மதராசன் | 553401720V | 175/10 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் | திரு சிவசுப்ரமணியம் சுதாகர் | 840160220V | 538 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| 7 | 16 | திரு கந்தையா இரத்தினசிங்கம் | 430921886V | இல 32/1, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் | திரு கேதாரநாதன் ஜனகன் | 823370121V | 127 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் |
| 8 | 21 | திரு நாகலிங்கம் முருகபூபதி | 470091940V | 30/2, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் | திரு கேதாரநாதன் ஜனகன் | 823370121V | 161 சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் |
| 9 | 23 | திரு கந்தையாபிள்ளை சண்முகராசா | 490083464V | 156 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் | திரு.பஞ்சாட்சரம் பிரேமச்சந்திரன் | 500935219V | பாடசாலை முன் ஒழுங்கை பிள்ளையார் கோயிலடி சுதுமலை தாவடி |
| 10 | 26 | முகம்மது தாவுது முகம்மது இஸ்பகான் | 562893555V | 33 காதி அபூபக்கர் வீதி,யாழ்ப்பாணம் | திரு.குருநாதன் லோகநாதன் | 620400777V | 233 சட்டநாதர் வீதி, திருநெல் வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் |
| 11 | 29 | மொகமட் அப்துல்காதர் முஹஸீன் | 440023673V | 225/7 C வாரணா வீதி, திகாரியா, கம்பகா | திரு தம்பிராசா இராஜேந்திரன் | 720822458V | 4 வது ஒழுங்கை, மானிப்பாய் றோட், உடுவில் சுன்னாகம் |
| 12 | 46 | திரு இராசரத்தினம் இராசாராம் | 411930173V | இல:06 முதலாம் ஒழுங்கை, கற்குழி, சாவகச்சேரி | திரு.இராசரத்தினம் சர்வேஸ்வரன் | 761481860V | 05 மருதடி லேன், யாழ்ப்பாணம் |
| 13 | 51 | திரு இராசையா இராஜேஸ்வரன் | 540014523X | 96 ஈச்சைமோட்டை வீதி, யாழ்ப்பாணம் | திரு இராசையா இந்திரேஸ்வரன் | 630222176V | மானிப்பாய் வீதி, தாவடி கொக்குவில் |
| 14 | 54A | திரு சுப்பிரமணியம் சுதர்சன் | 741361833V | இல 15, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம் | திரு கந்தராசா கஜேந்தன் | 840062015V | மூனாமலை லேன், மானிப்பாய் |
| 15 | 62 | ஆழ்வாப்பிள்ளை கைம்பெண் சிவதங்கமலர் | 416961310V | அல்வாய் தெற்கு, அல்வாய் | திரு இராசரத்தினம் கஜந்தன் | 791944430V | 10 மருதடி வீதி, யாழ்ப்பாணம் |
| 16 | 65 | திரு திருவாதர் கந்தசாமி | 351040238V | கருங்காலி, காரைநகர், யாழ்ப்பாணம் | திருமதி நாகராசா சுபாகினி | 846752153V | 179/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் |
| 17 | 66 | திரு திருவாதர் கந்தசாமி | 351040238V | கருங்காலி, காரைநகர், யாழ்ப்பாணம் | திருமதி நாகராசா சுபாகினி | 846752153V | 179/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் |

**நவீன சந்தை வெளிப்புறம்**

| தொ.இல | கடை இல | குத்தகையாளர் முழுப்பெயர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி | உரிமை மாற்றத்திற்கு விண்ணப்பித்தோர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | 1 | முகமது அபாஸ் அப்துல் அஸீஸ் | 520791060V | இல 47, வின்சன் வீதி, கொழும்பு 12 | திரு சிவசம்பு மோகனதாஸன் | 652130151V | 40/1 நாவலர் றோட், யாழ்ப்பாணம் |
| 19 | 3 | திரு சண்முகநாதன் ஸ்ரீகாந் | 752732892V | சிவபதி இல்லம், தலங்காவல், பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி | திரு தம்பையா தியாகலிங்கம் | 530705870V | 280, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| 20 | 10 | திருமதி நவனகுமார் மதிவதனி | 677190078V | சரசாலை வடக்கு, சாவகச்சேரி | திரு சின்னத்துரை கபிலன் | 812530879V | 209 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் |
| 21 | 11 | திரு பேரம்பலம் பாலசுப்பிரமணியம் | 531733088V | 92 பலாலிவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | திருமதி சிவசுப்பிரமணியம் கமலாதேவி | 585614157V | 537 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| 22 | 13 | முத்துராசா நஜீப் | 530322795V | இல: 16 ஜெயா றோட், கொழும்பு 04 | திரு சின்னத்துரை கோபிலன் | 812531158V | 209 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் |
| 23 | 14 | திரு கணபதிப்பிள்ளை செல்லத்துரை | 440804004V | 10 ஆம் கட்டை, ஆபரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம் | திரு சுந்தரலிங்கம் சுதர்சன் | 832962732V | 56 புதிய வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் |

**நவீன சந்தை மேல்மாடி**

| தொ.இல | கடை இல | குத்தகையாளர் முழுப்பெயர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி | உரிமை மாற்றத்திற்கு விண்ணப்பித்தோர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | 2 | திரு. கதிரவேலு பூரணநந்தன் | 471852899V | 20/6 வைரவர்கோயில் வீதி, யாழ்ப்பாணம் | திரு.முத்துசாமி ஜெகதீசன் | 560441649V | 342 ஏ வி றோட் அரியாலை |
| 25 | 3 | செல்வி வே. நடராசா கலைமகள் | 727200720V | 29 கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம் | திரு முத்துசாமி ஜெகதீசன் | 560441649V | 342 ஏ வி றோட் அரியாலை |
| 26 | 7 | சாகுல் சாகுல்கமீத் பதூத்தா | 436640374V | 330/16 ரத்மல்ஜயா, தில்லையடி, புத்தளம் | திரு பாலகிருஸ்ணன் சிவதர்ஷன் | 822261647V | சம்மந்தர் கண்டி, காரைநகர் |
| 27 | 8 | திருமதி. தாமோதரன் நவமணி | 495662888V | 82/17 பருத்தித்துறை வீதி, மூன்றாம் தெரு, யாழ்ப்பாணம் | திரு பாலகிருஸ்ணன் சிவதர்ஷன் | 822261647V | சம்மந்தர் கண்டி, காரைநகர் |
| 28 | 13 | திரு இராஜலிங்கம் மகாலிங்கம் | 370291152V | இல 32, அல்பிறட் பிளேஸ், கொழும்பு 3 | திரு கந்தையா ஸ்ரீபதி | 390940351V | நெட்டிலிப்பாய், கோண்டாவில் |
| 29 | 14 | மீரா சாகிப் ஐனூன் | 620800910V | இல 98, சென் லாசரஸ் வீதி , பெரியமுல்லை, நீர்கொழும்பு | திரு சின்னத்துரை ஜெயகாந்தன் | 531322339V | 49 பெந்தகோஸ் வீதி, யாழ்ப்பாணம் |
| 30 | 15 | மீரா சாகிப் ஐனூன் | 620800910V | இல 98, சென் லாசரஸ் வீதி , பெரியமுல்லை, நீர்கொழும்பு | திரு சின்னத்துரை ஜெயகாந்தன் | 531322339V | 49 பெந்தகோஸ் வீதி, யாழ்ப்பாணம் |
| 31 | 19 | திருமதி பத்மேஸ்வரி கன்கரத்தினம் | 546451488V | 398/2 நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் | மீரா சாகிப் ஐனூன் | 620800910V | 115 முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் |
| 32 | 21 | திரு மனுவேல்பிள்ளை பீற்றர்பெனடிக்ற் | 332671200V | 46/4 ரமணா மாவத்தை, நீர்கொழும்பு | திரு செல்லத்துரை கஜன் | 812711385V | ஆவரங்கால் மேற்கு, புத்தூர் |
| 33 | 23 | திரு சிவசம்பு சிவராமன் | 393612177V | புதுவீதி காரைநகர், யாழ்ப்பாணம் | திரு வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் | 483633696X | 537 கஸ்தூரியார் வீதி, யாழப்பாணம் |
| 34 | 24 | திரு நடராசா கணேசன் | 471061140V | தங்கோடை காரைநகர், யாழ்ப்பாணம் | திரு சுந்தரலிங்கம் சுதர்சன் | 832962732V | 56 புதுவீதி அத்தியடி யாழ்ப்பாணம் |
| 35 | 30 | திருமதி சத்தியபாமா இராஜலிங்கம் | 368261203X | இல G 3/2 அரச அடுக்குமாடி, பம்பலப்பிட்டி, கொழும்பு -04, | திரு.செல்லத்துரை கஜன் | 812711385V | ஆவரங்கால் மேற்கு, புத்தூர் |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி 07 ஆம் பக்.

## பொது அறிவித்தல்

### மாநகரசபைக்கு சொந்தமான கடைகளை குத்தகை உரிமை மாற்றம் செய்தல் (தொடர்ச்சி)

| தொ .இல | கடை இல | குத்தகையாளர் முழுப்பெயர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி | உரிமை மாற்றத்திற்கு விண்ணப்பித்தோர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|---|---|
| 36 | 3 | திரு நாகன் சின்னராசா | 520614184V | இல 02, பி.ஏ.தம்பி லேன், ஓட்டுமடம், யாழ்ப்பாணம் | பாறுக் முகம்மது பஸ்லின் | 820232631V | 78A மேல் றோட், பெரியமுனை, நீர்கொழும்பு |
| 37 | 5 | திரு சுப்பிரமணியம் இரத்தினசபாபதி | 531302427V | 20/9 ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் | திரு கந்தசாமி சிறீரமணன் | 832683698V | மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி |
| 38 | 6 | திரு சிவலிங்கம் மயூரதன் | 811902900V | 93/9, இராசாவின் தோட்டவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் | திரு கந்தசாமி சிறீரமணன் | 832683698V | மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி |
| 39 | 10 | திருமதி.பாலநாயகி கலியுகவரதராஜா | 657141755V | 8/1 பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம் | திரு இராமு சிவலிங்கம் | 560073950V | ஸ்ரேசன் லேன் சாவகச்சேரி |
| 40 | 16 | திரு சிங்கராஜா விஜயராசா | 732342524V | ஓடக் கரை, கல்லூரி வீதி, பருத்தித்துறை | திரு சிவபாலன் கோவரதன் | 900940971V | கேணிக்கரை, அளவெட்டி கிழக்கு, அளவெட்டி |

பஸ் நிலையம்

| தொ .இல | கடை இல | குத்தகையாளர் முழுப்பெயர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி | உரிமை மாற்றத்திற்கு விண்ணப்பித்தோர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|---|---|
| 41 | 8 | திரு சின்னத்தம்பி தங்கராசா | 240420180V | 81/6 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | திருமதி முரளீஸ்வரபவான் நந்தகுமாரி | 745243525V | 32/2 சி பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம் |
| 42 | 9 | திரு சின்னத்தம்பி தங்கராசா | 240420180V | 81/6 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | திரு தனபாலசிங்கம் முரளீஸ்வரபவான் | 713160415V | 187/29 யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் |
| 43 | 24 | திரு சாந்தலிங்கம் தனநாயகம் | 501664006V | 25/14 ஓடை வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் | திரு மகாதேவன் சோதிரூபன் | 921461038V | 09 சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்பாணம் |

ஸ்ரான்லி வீதி

| தொ .இல | கடை இல | குத்தகையாளர் முழுப்பெயர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி | உரிமை மாற்றத்திற்கு விண்ணப்பித்தோர் பெயர் | அடையாள அட்டை இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|---|---|
| 44 | 1 | திரு செல்லத்துரை சர்வானந்தன் | 421372900V | சுருவில், ஊர்காவற்துறை | திரு நடராசா குணபாலசிங்கம் | 663082213V | 42/5 கோணாவளை லேன், கொக்குவில் |
| 45 | 5 | சேதர் சின்னத்தம்பி குமாரசாமி | 310471356V | இல 01, நாமகள் வீதி, கொக்குவில் | திரு தியாகராஜா துவாரகேஸ்வரன் | 722130553V | 229 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் |

ஆணையாளர்,
மாநரசபை,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த (04.06.2022) சனிக்கிழமை
சிவபதமடைந்த சிவகுரு ஆதீன
செயலர்

**அமரர் செல்வி**
**ஓங்காரரூபி சண்முகநாதன்**

**தோற்றம்**
**07.08.1950**

**மறைவு**
**04.06.2022**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நாளை (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**692, பருத்தித்துறைவீதி,**
**நல்லூர்.**

**சிவகுரு ஆதீனம்.**
**077 222 0103**

## காணவில்லை



மல்லாவியை சொந்த இடமாகக் கொண்ட **சந்தனம் சதீஸ்** என்பவர் கொட்டடியில் தற்போது வசித்து வந்த நிலையில் **கடந்த 01.04.2023 முதல் இன்றுவரை** காணவில்லை. இவர் தொடர்பாக ஏதேனும் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:-**
**மகாலிங்கம்,**
**மகேந்திரன்.**
**077 162 4568**

(CS/50654)AH-1

## மரண அறிவித்தல்



## திரு. விஜயகுமார் முத்துகுமார்

(முன்னாள் முல்லைத்தீவு மாவட்டத்தின் வீடமைப்புத் திட்டத்தின் முகாமையாளர்.
இளைப்பாறிய கனடா ஒன்ராறியோ மாநில இலாகாவின் வருமானவரி, பரிசோதகர்.
பழைய மாணவர் யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி)

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட விஜயகுமார் முத்துகுமார் (முன்னாள் முல்லைத்தீவு மாவட்டத்தின் வீடமைப்புத் திட்டத்தின் முகாமையாளர். இளைப்பாறிய கனடா ஒன்ராறியோ மாநில இலாகாவின் வருமானவரி பரிசோதகர். பழைய மாணவர் யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்கள் கடந்த (28-05-2023) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துகுமார் கண்மணி தம்பதிகளின் பாசமிகு மூத்த புதல்வரும், பண்டிதர் பொன்னுத்துரை நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தர்மலிங்கம் இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு பெறாமகனும்; விமலாதேவி (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், சஞ்ஜித்குமார், கஜந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி சஞ்ஜித்குமார் அவர்களின் அன்பு மாமனாரும், செல்வகுமார், தர்மமூர்த்தி (பிரித்தானியா), பாஸ்கரமூர்த்தி, ஜெயலஷ்மி, டாக்டர் நவலஷ்மி, காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், சுகுமார், மகாலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேஸ்வரி திருநாவுக்கரசு, கலியாணசுந்தரம், காலஞ்சென்ற கமலாதேவி தர்மலிங்கம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்), டாக்டர் விமலேந்திரன், பாலேந்திரன், யோகேந்திரன், ரவீந்திரன், புவனேந்திரன், நிர்மலாதேவி லோகராஜ், காலஞ்சென்ற வத்சலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை **Markham** மாநிலம் கனடாவில் காலை 9.00 - 12.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

**தொடர்பு: விமலாதேவி விஜயகுமார்**
**+141 645 07589**
**சஞ்ஜித்குமார் விஜயகுமார்**
**+ 141 670 11783**

**தகவல்:**
**த.பாஸ்கரமூர்த்தி (தம்பி-சகோதரர்)**
**(உரிமையாளர் - மகாலட்சுமி**
**தேநீரகம் கொக்குவில்)**

(CS50645)N-1

## வேலையாள்கள் தேவை

வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றுக்கு (சேர்விஸ் ஸ்ரேசன்) குறித்த வேலை தெரிந்த மற்றும் பழக விரும்பும் வேலையாள்கள் தேவை.
மானிப்பாய் பிரதேசத்தை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.

**077 907 8839**

(CS/50646)AH-1

## தனிப்பட்ட வகுப்புக்கள் தரம் 9 - GCE (O/L) வரை

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தனிப்பட்ட ரீதியாகவோ, குழுக்களாகவோ வீடுகளுக்கு / கல்வி நிறுவனங்களுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**075 049 7577**

(CS/50841)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நல்ல இன டோமன்
நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**வி.கபிலன்**
**இல.160, மானிப்பாய் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

CS/50640)AH-1

## வேலைவாய்ப்பு

எமது **Everest** நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், சாவகச்சேரி கிளைகளுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

1. Electrician
2. Store Keeper
3. Administration
4. Supervisor
5. Distributor

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:- 077 6953 242**

(CS 25116) A-1

## வீடு வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் US Hotel இற்கு அருகாமையில் 5 படுக்கை அறைகள், வரவேற்பறை 3, குளியலறை 3 மற்றும் சமையலறை, உதவியாளர்கள் தங்கும் அறையை கொண்ட விசாலமான வீடு வாடகைக்குண்டு.

(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: **1. 076 551 3820**
**2. 075 041 5867**

(cs25107) (N-1)

## Chundikuli Girls' College, Old Girls' Association, Jaffna.

### Annual General Meeting

- Date : Saturday, 10th June, 2023
- Venue : College Hall
- 9.00 a.m. : Holy Communion & Worship Service at St. John the Baptist's Church
- 10.30 a.m. : Principal's Tea
- 11.00 a.m. : A.G.M
- 12.30 p.m. : Fellowship Lunch

Tickets - Rs. 1000/=

All Old Girls are cordially invited

Secretary

(cs 50651) (N-1)



## மயிலங்கூடல் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை

மேற்படி எமது மயிலங்கூடல் ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த விசாக பொங்கல் உற்சவம் எதிர்வரும் (06.06.2023) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு பொங்கல் பூசைகள் ஆரம்பமாகி 10 மணியளவில் பூசைகளுடன் நிறைவு பெறும். அன்றையதினம் முற்பகல் 10 மணியளவில் கோவில் புதிய நிர்வாக தெரிவும் பொதுக் கூட்டமும் இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**நிர்வாக சபை,**
**சி. நவரட்ணம் (பொருளாளர்)**

(CS/50655)AH-1

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் உயர்திரு. மயிலு சிவானந்தன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா / உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, சமாதான நீதவான், மணிவாசகப் புரவலர்)



**பிறப்பு** 17.03.1939 **இறப்பு** 05.06.2020

**திதி: வைகாசிப் பூரணை [03.06.2023]**

அப்பா !
பள்ளிக்கு அனுப்பி அறிவைத் தந்தீர்கள்
பார்வை ஒன்றில் தவறுகள் களைந்தீர்கள்
ஒற்றைச் சொல்லில் அனுபவம் உரைத்தீர்கள்
பக்குவமாய் பாசத்தைப் பொழிந்தீர்கள்
நாடகம் இல்லா அன்பைத் தந்தீர்கள்
போகும் வரையில் பார்வையால் உரைத்தீர்கள்
அன்னையே நமக்குத் தெய்வம் என்றீர்கள்
தெய்வத்தையும் உங்கள் அன்பில்
- அலைணத்தீர்கள் - அப்பா
ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறாது எம்மனம்

**உங்கள் ஆத்மா ஆலடிப் பாலகணபதியின்**
**பாதாரவிந்தங்களில்** [illegible]

**"செல்வமஹால்"**
**அல்வாய்.**

[illegible] **பேரப்பிள்ளைகள்.**

(CS 1097) (2-6)

## விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் வைகாசி மதம் 22ஆம் நாள் (05.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.56 மணி முதல் 12.50 மணிவரையுள்ள சிங்கலக்கினமும், மூலநட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்,

ப்ரம்மஸ்ரீ மஹாதேவக்குருக்கள்
புவனாம்பிகை அம்மா தம்பதிகளின்
பௌத்திரியும்
ப்ரம்மஸ்ரீ ஹரிஹர சர்மா சீதாலக்ஷ்மி
தம்பதிகளின் தௌகித்திரியும்
எமது சீமந்த குமாரியுமாகிய
சௌபாக்யவதி
**மனஸ்வினி**
எனும் வதுவை

ப்ரம்மஸ்ரீ சிவசுப்ரமணிய சர்மா
விமலாதேவி தம்பதிகளின்
பௌத்திரனும்
ப்ரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா சாவித்திரி
தம்பதிகளின் தௌகித்திரனும்
எமது சீமந்த குமாரனுமாகிய
சிரஞ்ஜீவி
**ஸ்ரீ வத்ஸ சர்மா**
எனும் வரனுக்கு

கன்னியாதான, திருமாங்கல்யதாரண, பாணிக்கிரகணம் செய்வதற்கு பத்தமேனி பிள்ளையார், கைலாசபிள்ளையார், குலதெய்வ அனுகிரகத்துடனும் மஹாபெரியவாளின் ஆசியுடனும் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வருகை தந்து மேற்படி வைபவத்தை நடத்திவைத்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

**திருமணம்** - ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபம், இணுவில்.
**சமாவர்த்தனம்** - அதிகாலை 4.30 மணிமுதல், மணமகன் இல்லம்.
**வதுவர கிரஹப்பிரவேசம்** - மாலை 5 மணி, மணமகன் இல்லம்
**வரவேற்புபசாரம்** - மாலை 5.30 மணி 06.06.2023 செய்வாய்க்கிழமை, நடராஜ பரமேஸ்வர மணி மண்டபம் நல்லூர்.

(தங்கள் நல்வரவை இனிதே நாடும்)

ப்ரம்மஸ்ரீ மஹாதேவ சோமசுந்தர சர்மா
கல்யாணி தம்பதிகள்
சோ.சுபானு
சோ.சங்கர்ஷணன்
கோண்டாவில் மேற்கு.
077 600 5653,
077 462 9300.

ப்ரம்மஸ்ரீ சிவசுப்ரமணிய சிவ்பால சர்மா
மீனலோஜனி தம்பதிகள்
சி.விஷ்வாதிகா
கைலாசபிள்ளையார் கோவிலடி,
நல்லூர்.
077 394 9359,
076 621 0910.

(இருவீட்டார் அழைப்பு)

CS 25117 (5x20) A-1

## மீனவருக்கு ஓர் நற்செய்தி



**13 H / P இல் இயங்க கூடிய மீன் பிடி பிளாஸ்ரிக் போட் சூரிய மின் உற்பத்தியில் (சோலர் பவர்) இயங்க கூடியவை. மண்ணெண்ணெய், பெற்றோல் போன்ற எரிபொருள் செலவுகள் இல்லாமல் இயங்க வைத்து தரப்படும். இதைப்பற்றி கலந்துரையாட விரும்புவோர் கீழ்காணும் மின்னஞ்சல் மூலமாகவோ தொலைபேசி ஊடாகவோ தொடர்புகொள்ளலாம்.**

**மீன்பிடி தொழில் அனுபவமுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்.**

**(மாதாந்தம் 100.000 சம்பளமும் பிடிக்கும் மீன்களில் 25% வழங்கப்படும்) நாளை (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை சூரியசக்தியில் இயங்கும் Board இனை வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரையில் பரிசீலனை செய்து காட்டப்படும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**


**E-mail: manivasagar@gmail.com**
**T.P.: 077 787 1320**

(cs 50649) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்ன வெங்காய உற்பத்தி

# தேசிய ரீதியில் 60 சதவீதம் பங்களிக்கும் யாழ்ப்பாணம்



**யாழ்ப்பாணம், ஜூன் 3**

**யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற சின்ன வெங்காயம் நாட்டின் மொத்தத் தேவையின் 60 சதவீதத்தைப் பூர்த்தி செய்கின்றது என்று வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி தெரிவித்தார்.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சின்ன வெங்காயத்துக்கான இலவசக் காப்புறுதியைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பான விடயம் ஆராயப்படும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

75 ஆயிரம் மெற்றிக்தொன் சின்ன வெங்காயம் நாடு முழுவதுக்கும் தேவையாக உள்ளது. யாழ். மாவட்டத்தில் 42 ஆயிரம் மெற்றிக்தொன் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதில் ஆயிரத்து 500 மெற்றிக்தொன் மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்கின்றது. எஞ்சியவை நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்றுமதி செய்யப்படுகின்றன - என்றார். (ஒ-5-125)

# 111 மருந்துகளுக்கே நாட்டில் தட்டுப்பாடு

### சுகாதார அமைச்சர் தகவல்



கொழும்பு, ஜூன் 3

நாட்டில் 200 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையில் தற்போது 111 மருந்துகளுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று மாதங்களுக்கு முன்னர் நாட்டில் சுமார் 200 மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருந்தது. தற்போது அது 111 ஆகக் குறைந்துள்ளது. அடுத்த இரு வாரங்களில் அது 70 ஆகக் குறையும். மருந்துக் கொள்வனவுக்கு நிதியை விடுவிப்பதிலும் பெற்றுக் கொள்வதிலும் சில சிக்கல்கள் உள்ளன.

விரைவில் அதுதொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது - என்றார். (ச-இ)

# 14 தொழிற்றுறைப் பிரிவினர் பதிவு செய்வது கட்டாயம்!

### வருமான வரித் திணைக்களம் கிடுக்கிப்பிடி

கொழும்பு, ஜூன் 3

நாட்டில் ஆண்டுக்கு 12 இலட்சத்துக்கும் அதிக வருமானம் பெறுகின்றவர்கள் உட்பட 14 தொழிற்றுறைகளை சார்ந்தவர்கள் தம்மை தேசிய வருமான திணைக்களத்தில் பதிவு செய்வது வியாழக்கிழமை முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இலங்கை மருத்துவசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவர்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள், முகாமைத்துவ கணக்காய்வு நிர்வாக உறுப்பினர்கள், இலங்கை பொறியியல் நிறுவன உறுப்பினர்கள், இலங்கை அளவீட்டு மற்றும் மதிப்பாய்வு நிறுவன உறுப்பினர்கள், உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள், பிரதேச செயலகங்களில் பதிவு செய்துள்ள வர்த்தகர்கள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளவர்கள் (முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரங்கள் தவிர) தம்மை வருமான திணைக்களத்தில் பதிவு செய்யவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அசையாச் சொத்துக்களை கொள்வனவு செய்துள்ள அல்லது உரித்தாக்கிக் கொள்வதற்கான உரிமத்தை பரிமாற்றிக் கொண்டவர்கள், இலங்கையில் மாதாந்தம் ஒரு இலட்சம் அல்லது வருடத்துக்கு 12 இலட்சம் ரூபா வருமானம் பெறுபவர்களும் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

அதேபோன்று இவ்வாண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள அல்லது அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் 18 வயதாகவுள்ள அனைவரும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-இ)

# கஜேந்திரகுமார் மீதான தாக்குதல்; அடக்குமுறையின் வெளிப்பாடு!

### சிறீதரன் எம்.பி. கண்டனம்

கிளிநொச்சி, ஜூன் 3

நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் இந்த நாட்டின் அதியுச்ச அடக்குமுறையையே காட்டுகின்றது என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

இந்த நாட்டின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்புவாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதை மிகத்தெளிவாகக் காட்டியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதோடு, இச்சம்பவத்திற்கு எனது வன்மையான கண்டனங்களையும் பதிவு செய்கிறேன் - என்றுள்ளது. (அ-ம-20,26)





எமது பாடசாலையில் சேவையாற்றி நேற்று (02.06.2023) ஓய்வுபெற்ற எங்கள் ஆசிரியை

**செல்வி துரைராசா புனிதா**

(பயிற்றப்பட்ட வர்த்தகம், B.A, PGDE)

**சேவைக்கால விபரம்**

**ஆசிரியப் பணியில் - 30.05.1989 - 02.06.2023**

1. யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை 30.05.1989 - 01.01.1993
2. யா/பலாலி ஆசிரியர் கலாசாலை - 02.01.1993 - 31.12.1994
3. யா/கைதடி நாவற்றுகுழி அ.த.க.பாடசாலை- 01.01.1995 - 06.01.1997
4. யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தி. - 07.01.1997 - 01.05.2001
5. யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம் - 02.05.2001 - 26.03.2015
6. யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் - 27.03.2015 - 02.06.2023

Best Wishes

(CS 25119) A-1

தனது 60 ஆவது வயதில் ஆசிரியப் பணியில் இருந்து நேற்று (02.06.2023) வெள்ளிக்கிழமை ஓய்வுபெற்ற ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன். இவரது ஓய்வு காலம் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

**யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1936



மறைவு 02 . 06 . 2023

## பரமநாதன் ஈஸ்வரி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமநாதன் ஈஸ்வரி நேற்று (02.06.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி பரமநாதன் (முன்னாள் பிரபல வர்த்தகர், உரிமையாளர் - பரமநாதன் ஸ்ரோர்ஸ்-SPS) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமநாதன், தெய்வேந்திரம் (PT-பிரபல வர்த்தகர், தெய்வம் பல்பொருள் வாணிபம், தெய்வம் புடைவை மாளிகை, புதுக் குடியிருப்பு), இராசேந்திரம் (உரிமையாளர் - RMR போக்குவரத்து சேவை, வவுனியா), காலஞ்சென்ற விஜேந்திரன் (அன்ரன்) மற்றும் சறோஜாதேவி, Dr.வேணுகாந்தன் (பணிப்பாளர், வீனஸ் விசேட வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கலாரஞ்சினிதேவி, காலஞ்சென்ற பத்மகாந்தன், பத்மினிதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 2423 62

(CS 25118) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 10 . 1936



மறைவு 02 . 06 . 2023

## ஆத்மநாதசர்மா விஸ்வநாதசர்மா

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் காகித தொழிற்சாலை, வாழைச்சேனை)

கச்சேரி நல்லூர் வீதி, ஆனைக்கோட்டை உயரப்புலம் ஆகிய இடங்களை வசிப்பிடமாக கொண்ட ஆத்மநாதசர்மா விஸ்வநாதசர்மா நேற்று (02.06.2023) வெள்ளிக்கிழமை மாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆத்மநாதசர்மா கோமதியம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணிய ஐயா பாயம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜானகிஅம்மா (சங்கீத ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், வித்தியாசங்கர் (குருகிருபா ஜோதிட ஆய்வு நிலையம்) அவர்களின் பாசமிகு தந்தையும், சந்தியா அவர்களின் அன்பு மாமனாரும், சதுர்த்திகன், தீனசரண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் உள்ள இல்லத்தில் இன்று (03.06.2023) சனிக்கிழமை நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகன் - வித்தியாசங்கர்
077 238 3080

# திஸ்ஸ விகாரைக்கெதிராக இன்று தையிட்டியில் போர்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக, இன்றையதினம் பெருமெடுப்பில் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பற்றாளர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டாளரான க.சுகாஷ் தெரிவித்ததாவது:-

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான மூன்றாம் கட்டப் போராட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இது எங்களது சொந்த பூர்வீக மண், எமது போராட்டமானது ஒரு சட்ட ரீதியான போராட்டம். இங்கு அமைக்கப்பட்டு இருக்கின்ற கட்டுமானம்தான் சட்டத்துக்குப் புறம்பானதே தவிர எமது போராட்டம் சட்டவிரோதமானது கிடையாது.

ஆகவே இந்த சட்ட ரீதியான போராட்டத்தை வலுப்படுத்துவது ஒவ்வொரு தமிழ்த் தேசிய பற்றாளர்களதும் வரலாற்றுக் கடமையாகும். இந்தப் போராட்டத்தை நாங்கள் தவிர்ப்போமானால் எங்களது மண் பறிபோவதற்கு நாங்களே காரணகர்த்தா ஆகிவிடுவோம்.

நாங்கள் தெரிந்தும் அந்தத் தவறை செய்யக்கூடாது. இன்று இந்தப் போராட்டத்தைத் தவிர்ப்போமேயானால் அம்பாறைக்கு ஏற்பட்டுள்ள நிலைமை, திருகோணமலைக்கு ஏற்பட்டுள்ள நிலைமை நாளை ஏனைய பகுதிகளுக்கும் ஏற்பட்டுவிடும். எனவே நாங்கள் இதனை அனுமதிக்கக்கூடாது, அனுமதிக்கவும் முடியாது. தமிழர் தாயகம் எங்கும் எமது மண்ணுக்காக, உரிமைக்காக போராட்டம் செய்ய வேண்டியது தமிழ் மக்களுடைய கடமையாகும் - என்றார். (அ-ம)


## வாடகைக்கு

நல்லூருக்கு அருகில் அறை
வாடகைக்கு உண்டு.
(பல்கலைக்கழக
மாணவிகளுக்குக் கொடுக்கப்படும்)
076 571 6720
021 222 8285

(S/50650)AH-1)


## வாள்வெட்டுடன்...

வெட்டுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் மேனன் தலைமையிலான குழுவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டதுடன், சந்தேகநபர்களிடம் இருந்து இரண்டு மோட்டார்சைக்கிள்கள் மற்றும் வாள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர்கள் 19 மற்றும் 20 வயதுடையவர்கள். அவர்கள் கொக்குவில் மற்றும் சுதுமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் பாடசாலை மாணவன். கடையின் வர்த்தக நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், சந்தேகநபர்கள் சென்று ஜூஸ் கேட்டுள்ளனர். உரிமையாளர் வழங்க மறுத்ததையடுத்தே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. 6 பேர்கொண்ட குழுவே தாக்குதலை நடத்தியுள்ள நிலையில், மேலும் மூவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1928



மறைவு 01 . 06 . 2023

## திருமதி. இரத்தினாம்பிகை சாந்தலிங்கம்

வேலணை மேற்கு எட்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை Dr. E. A. Cooray Mawatha ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினாம்பிகை சாந்தலிங்கம் அவர்கள் 01.06.2023 அன்று தனது 95 ஆவது வயதில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சாந்தலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தையலம்மை அவர்களின் அன்பு மருமகளும் தர்மகுலசீலன் (குகதாசன்), சுகராஜன், விமலதாசன், தவமலர், பரமதாசன், குமாரதாசன், திருமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தினி, யோகராணி, நந்தினி, காலஞ்சென்ற குகநாதன் (மகாராஜா பூட்ஸ்), லதாயினி, சிவசக்தி, சிவசக்திவேல் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, துரைசிங்கம், இராசரட்ணம் மற்றும் மீனாட்சி அவர்களின் அன்புச் சகோதரியும் பவித்திரா - மயூரேசன், லர்வண்யா, மாதுசன், அனுர்த்தன், திவாஸ்கர், ராகவி, ஜீவிகா, ஜோதிகா, விஜயானந்த் - மித்ரா, வித்தியநாத், கோகுல்நாத், கவான், மிதுன், விதுசா, விக்னவி, அனோஜன், அஞ்சுகா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆதியாவின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் 04.06.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 09.00 மணிமுதல் பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மதியம் 02.30 மணிமுதல் ஈமக்கிரியைகள் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு பொரளை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல் : குடும்பத்தினர்
No.25,1/1, Dr. E.A Cooray Mawatha, Colombo 06.

மேலதிக விபரங்களுக்கு
+94 76 690 2950 - விஜய் (பேரன்)
+94 766 71 7046 - ராசன் (மகன்)
+94 77 774 7299 - வித்தி (பேரன்)
+49 1783 423 915 - விமல் (மகன்)
+94 77 350 0265 - சீலம் (மருமகன்)
+1 416 357 5382 - பரமன் (மகன்)
+1 416 624 6909 - குமார் (மகன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 29,000...

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான முக்கியமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 7 மணி வரை முல்லைத்தீவு மாவட்ட பதில் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் கரைதுறைப்பற்று பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா முதலிய மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் முன்னர் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்த 29 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவித்தல் தொடர்பில் மீள் வர்த்தமானி உருவாக்கத்துக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று முன்னர் மக்கள் பயன்பாட்டில் இருந்த 17 ஆயிரம் ஏக்கர் காணிகள் இன்றுவரை விடுவிக்கப்படாமல் பற்றைகளும் காடுகளுமாக இருக்கின்றன. இவற்றுக்கான தீர்வைப் பெற்றும் கொடுக்கும் நோக்கில் ஜனாதிபதியின் செயலர் தலைமையில் தேசிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வனஉயிரிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நந்திக்கடல், கொக்கிளாய், சுண்டிக்குளம், நாயாறு ஆகிய இடங்களிலும் மக்கள் பாவனைக்கு காணிகளை விடுவிப்பது தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வன உயிரிகள் அமைச்சின் மேலதிக செயலர் திருமதி சமந்தி, வன உயிரிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள, வன வளத்திணைக்களத்தின் நாயகம், மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.குணபாலன், மாவட்ட உதவி மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், கமநல சேவை திணைக்களத்தின் உதவி ஆணையாளர், மாவட்ட வனவள திணைக்களத்தின் பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசன பொறியலாளர், காணிப் பகுதி உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ஓ.5)

## இந்தியாவில்...

வரையான முதற்கட்டத் தகவல்கள் தெரிவித்தன.

தவறான தண்டவாள வழிநடத்தலே விபத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. சுமார் 350 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதனால், இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. (ம)

## ஹெரோய்னுடன்...

யுவதியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்பாணம் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த யுவதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில், வறுத்தலைவிளான் பகுதியில்வைத்து யுவதி கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-20)

## கஜேந்திரகுமார்...

அத்துடன், பொலிஸ் புலனாய்வாளர் என்று அடையாளப்படுத்திய நபரொருவர் நாடாளுமன்ற உறுப்பினருக்கு நேராக துப்பாக்கியைக் காட்டி, 'சுட்டுக் கொல்வேன்' என்பது போல மிரட்டியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மருதங்கேணியில் உள்ள விளையாட்டுக் கழகமொன்றைச் சேர்ந்தவர்களைச் சந்திப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு சென்றிருந்தார். அங்குள்ள மைதானத்தில் இளைஞர்களுடன் அவர் கலந்துரையாடிக் கொண்டிருந்ததை இருவர் தமது அலைபேசியில் காணொலியாகப் பதிவுசெய்து கொண்டிருந்தனர். இதைக் கண்டதும் நாடாளுமன்ற உறுப்பினரின் உதவியாளர் அந்த இருவரிடமும் சென்று, நீங்கள் யார்? எதற்காகக் காணொலியைப் பதிவுகளைச் செய்கிறீர்கள்? என்று வினவியுள்ளார்.

தமது விவரங்களை வெளியிட மறுத்த அந்த இருவருக்கும், நாடாளுமன்ற உறுப்பினரின் உதவியாளருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் அவர்கள் தங்களை அரச புலனாய்வாளர்கள் என்று கூறியுள்ளனர். அதனை நிரூபிப்பதற்கு வேண்டிய அடையாள அட்டையைக் காண்பிக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் அவர்களிடம் வலியுறுத்தியுள்ளார். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை.

இதையடுத்து வாய்த்தர்க்கங்கள் இரண்டு தரப்பினருக்கும் இடையில் முற்றிய நிலையில், தம்மைப் புலனாய்வாளர்கள் என்று அடையாளப்படுத்திய இருவரில் ஒருவர் திடீரென நாடாளுமன்ற உறுப்பினரையும், அவரது உதவியாளரையும் தலைக்கவசத்தால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். இதனால் ஆத்திரமுற்ற மக்கள், எஞ்சியநபரைச்சுற்றிவளைத்துள்ளனர். தாக்கிவிட்டு ஓடிய நபர் அங்கு வரும் வரை தம்மிடம் பிடிபட்ட நபரை விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர். அந்த நபர் உடனடியாகப் பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பெடுத்துப் பேசியுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அருகில் இருந்த பாடசாலையொன்றில் பரீட்சைக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவரும், அவருடன் சிவிலுடையில் இன்னொருவரும் அங்கு வந்து சம்பவம் தொடர்பில் விசாரித்துள்ளனர். முன்னணியிரும் மக்களும் மடக்கி வைத்திருந்த நபர் அரச புலனாய்வாளர்தான் என்றுகூறி அவரை விடுவிக்குமாறு வந்தவர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

தப்பியோடியவர் வராமல் பிடிபட்ட நபரை விடுவிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டதும், மோசமான வார்த்தைகளால் பொலிஸாரும் அவருடன் சிவில் உடையில் வந்தவரும் அங்கிருந்தோரையும், நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமாரையும் திட்டியுள்ளனர். அப்போது அவர்களில் ஒருவர் தன்னிடமிருந்த பிஸ்டலைத் தூக்கி நாடாளுமன்ற உறுப்பினருக்கு நேரே நீட்டி, பிடிபட்டுள்ள நபரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று மிரட்டியுள்ளார்.

இந்தச் சமயத்தில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் அங்கு வருகை தந்தார். 'ஏ.ஜயதிஸ்ஸ' என்று அவர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். தானே அந்தப் பகுதிக்கான பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி என்றார். அவரும் முன்னணியினர் மடக்கி வைத்திருக்கும் நபர் அரச புலனாய்வாளர் என்றும், அவரை விடுவிக்கும்படியும் வலியுறுத்தினார். தவறாக நடந்துகொண்ட இருவருக்கும் தண்டனை இடமாற்றம் வழங்கப்படும் என்றும், இந்தப் பிரச்சினையை இணக்கப்பாட்டுடன் முடித்துக்கொள்ளலாம் என்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

ஆனால் முன்னணியினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். தாக்கிவிட்டுத் தப்பியோடிய நபரைக் கொண்டு வந்து அடையாளப்படுத்தும் வரைக்கும் மடக்கி வைத்திருந்த நபரை விடுவிக்க முடியாது என்று தெரிவித்தனர். இதனால் அங்கு மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இதையடுத்து பொலிஸ் நிலையத்துக்கு வந்து இது தொடர்பில் முறைப்பாடு வழங்குமாறும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார். 'இந்தச் சம்பவத்தின் மூலம் எனது நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பேன்' என்று கூறிய கஜேந்திரகுமார் எம்.பி., தடுத்து வைத்திருந்த நபரை விடுவித்து அங்கிருந்து புறப்பட்டார். (அ-ம-22,26)

## சிறுவர்...

வடிக்கைகள், சமூகம் சார் பிரச்சினைகள் சம்பந்தமாகத் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டபடியே இருக்கின்றேன். இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பல கலந்துரையாடல்களையும் சமூகப் பிரச்சினைகளைத் தடுப்பதற்கான தந்திரோபாய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கின்றோம். எங்களுடைய மாவட்டத்தில் சிறுவர் வன்கொடுமை என்பது அதிகரித்த தொன்றாகவும் எதிர்காலத்தையும் பாதிக்கக் கூடிய பிரச்சினையாகவும் காணப்படுகின்றது. எனினும், அதனை அலட்சியப்படுத்திக்கொண்டு இருக்கின்றோம்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய கல்வி நிலை குறித்து வெட்கப்பட வேண்டியுள்ளது. கல்வியில் முதலிடத்திலிருந்த மாவட்டம் தற்போது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளி அதிகரித்துவிட்டது. பிள்ளை தனது பிரச்சினைகள் குறித்துப் பெற்றோரிடம் உரையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை. இதனாலேயே பிள்ளைகள் தவறான வழிநடத்தலின் கீழ் சென்று, தவறான வழியில் பயணிக்கின்றனர். இது குறித்துப் பெற்றோர்கள் அதீத கவனம் எடுக்கவேண்டும். மேலும் ஆசிரியர்களும் மாணவர்களின் நலனில் அக்கறை எடுக்கவேண்டும்.

எமது மாவட்டத்தில் சிறுவர் வன்கொடுமை மாத்திரமின்றி சட்டவிரோத போதைப் பொருள் பாவனையும் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து தீவிர நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸார் மற்றும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் - என்றார். (அ-ம-20)

## கடற்போக்குவரத்தில்...

செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில், கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள் தரச்சான்றிதழை கட்டாயம் பெற்றுக் கொள்வதுடன், படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. தாழ்வுப்படகுகள் ஏணிப்படி வசதி அமைத்தலை உறுதிப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பாதுகாப்பு மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோரை கைது செய்தல், கடற்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகள் அணிவதை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, கடற்போக்குவரத்து நேரத்திற்கமைய தரைப்போக்குவரத்தை ஏற்படுத்தல், வாகனத்தரிப்பிடம், படகுகளில் பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதை தவிர்த்தல், தரை மற்றும் கடற்போக்குவரத்து நேரஅட்டவணையை காட்சிப்படுத்தல், மின்இணைப்பு, படகுகளில் மோட்டார் வாகனங்களை ஏற்றும்போது பிரதேசசெயலரிடம் அனுமதி பெறல், யாசகம் பெறுவோர் உள்வருவதைத் தடுத்தல் தொடர்பாகவும் கவனம்செலுத்தப்பட்டது.

மேலும் கடைகளுக்கு பிரதேசசபையின் அனுமதி, நடமாடும் மருத்துவ சேவை, சுகாதாரம், மற்றும் குடிநீர்த் தேவை, மின்சாரத்தேவை, அமுதசுரபி அன்னதான ஒழுங்குகள், அம்புலன்ஸ் சேவை மற்றும் புனரமைக்கவேண்டிய வீதிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர், உதவி மாவட்டச் செயலாளர், அறங்காவலர் சபைத் தலைவர் (நாகபூஷணி அம்மன் ஆலயம்), பிரதேச செயலாளர் (வேலணை), வலயக்கல்விப்பணிப்பாளர் (வேலணை), மின்சாரசபையின் பிரதிநிதிகள், சுகாதாரத் துறைசார் பங்குதாரர்கள், இலங்கைப் போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர், துறைசார் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம)

## முறைப்பாடு...

அச்சுறுத்தல் தொடர்பில், அவர் முறைப்பாடு வழங்கியதும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் தொலைபேசி வாயிலாக அவர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். இதையடுத்து, கிளிநொச்சி மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு விடயம் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. அத்துடன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தொடர்புகொண்டு இது தொடர்பில் எழுத்துமூல முறைப்பாடு வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது. முறைப்பாடு கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு துரிதமாக முன்னெடுக்கும் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்மொழித் தின தேசிய நிலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் மாணவர்கள் மூவரும் ஜனாதிபதி சாரணர் விருதுபெற்ற மாணவர் ஒருவரும் கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஐக்கிய இராஜ்ஜியக் கிளையால் கடந்த புதன்கிழமை கௌரவிக்கப்பட்டனர். (ச-9)

# கசிப்பு விற்பனை; ஆசிரியர் கைது!

கசிப்பைக் காய்ச்சி அதனை விற்பனை செய்வதற்கு தயாராக வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையில் ரிதிமாலிய பகுதியில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து சுமார் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன.

அந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியரே கைதுசெய்யப்பட்டவராவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கலால் திணைக்களத்தின் புள்ளிவிவரத் தகவல்களின் அடிப்படையில் மதுபானப் பாவனை சடுதியாகக் குறைந்து கசிப்பு உள்ளிட்ட ஏனைய சட்டவிரோத மதுபாவனைகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-இ)

## விடை சொல்லிய ஆசிரியர் நீக்கம்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின்போது மாணவர்களுக்கு விடையளிப்பதற்காக உதவினாரென ஆசிரியர் ஒருவர் பரீட்சை நிலைய கண்காணிப்புப் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்திலுள்ள பாடசாலை பரீட்சை நிலையத்தில் கடமையிலிருந்த ஆசிரியர் ஒருவரே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளார் என வடமத்திய உதவி மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆசிரியர் அந்தப் பிரதேசத்தில் தனியார் வகுப்புக்களை நடத்தும் ஆசிரியரெனவும் தன்னுடைய தனியார் வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்களுக்கே விடையளிக்க உதவியுள்ளார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

(ச-இ)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ் நகர் மத்தியில் இயங்கும் Fancy Shop ஒன்றுக்குப் பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை.

Contact Number:- 076 129 7435

S/50647)AH-1)

**English Classes**

Gr.1 to O/L

Grammar with Spoken

(வீடு வந்து கற்பிக்கப்படும்)

T.P.: 077 331 4608 (யாழ்ப்பாணம்)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 55 வயது, வியாபாரம், விவசாயம் செய்யும் மணமகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. (தாரம் இழந்தவர்களும், சைவ உணவு உண்பவர்களும் விரும்பத்தக்கது.

- படம், குறிப்பு விடயத்தை Whatsapp இற்கு அனுப்பலாம்.

075 494 2505

(CS50657)AH-1

**கீழ்வரும் பொருட்களை வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம்**

| பொருட்கள் விபரம் | | விலை |
|---|---|---|
| 1). போக்லிப்ட் (03 Ton) Commetsu | - | 650,000.00 |
| 2). 40 அடி கன்ரேனர் பெட்டி | - | 1050,000.00 |
| 3). 20 அடி கன்ரேனர் பெட்டி (ரான்ஸ்போட் உட்பட) | - | 725,000.00 |
| 4). ரியுசன் மேசை, கதிரை 30 செட் (திருத்தம் செய்யவேண்டும்) | - | 45,000.00 |
| 5). ஜக் முட்டு (பாவித்தது) 01 | - | 2,700.00 |
| 6). வாகனம் நிறுக்கும் தராசு 40 Ton | - | 1,400,000.00 |
| 7). லொறி தட்டு (6 weel) | - | 400,000.00 |
| 8). பாவித்த கூரை சீற் (8', 10', 12') அடி | - | 230.00 |

தொடர்பு:

தொலைபேசி இலக்கம்:077 959 7231

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606.

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்துக்கு கீழ்வரும் வேலைகளுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் **திங்கள் முதல் புதன் வரை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.**

- Computer Billing (ஆண்/ பெண்)
- பில் கட்டிக் கொடுப்பவர் (ஆண்)
- Delivery செய்வதற்கு (ஆண்)

விநாயகர் ஸ்ரோஸ்

424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

077 419 5015

(CS/50653)AH-1

**பணியாளர்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/ பெண் இருபாலாரும்
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): O/L, ICT, A/L,Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்:** (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர் :** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி

இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cr. 39854) (N-1)

**45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த (22.04.2023) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

**சுப்ரமணியம் மகாதேவா**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.06.2023) சனிக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 05.06.2023 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் சகோதரியின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

இல.24/2, கணேசபுரம்,
கிளிநொச்சி.
077 387 2992, 076 5312 386

மகன்கள்
துஷியந்தன் (Norway)
ஜெயந்தன் (India)

(CS 25114) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.